முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எச்.எம்.ஓ.பி. எண். 19/2024

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | அன்பு |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | பச்சையப்பன் |
| வயது | .. | 59 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | உக்கம்பெரும்பாக்கம் |
| வட்டம் | .. | செய்யாறு |

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். திருமண அழைப்பிதழ் ம.த.சா.ஆ.1, செய்யாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எம்.சி.3/2023 வழக்கில் பிறப்பித்த உத்தரவு நகல் ம.த.சா.ஆ.2, 14.03.2024 தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் ம.த.சா.ஆ.3, மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.த.சா.ஆ.4, மனுதாரர் குடும்ப அட்டை நகல் ம.த.சா.ஆ.5, 24.03.2000 தேதிய கிரையப்பத்திரத்தின் நகல் ம.த.சா.ஆ.6.